கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு - சைதையில் "முதல்வர் கோப்பை"

தமிழ்நாட்டின் முன்னணி கபடி வீராங்கனைகள் பங்கேற்கும்

மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டி!

திரைப்பட முன்னணி நடிகர்கள் தொடங்கி வைக்கின்றனர்

மாவட்ட கழகச் செயலாளர்-அமைச்சர்

மா.சுப்பிரமணியன் அறிவிப்பு !

05 பிப்ரவரி 2026 ❖ மாலை 5.30 மணி

சிறப்பு விருந்தினர்கள்

புரட்சி நடிகர் **சத்யராஜ்** | மனத்தி **P.கணேசன்**

கபடி வீரர் - பைசன் திரைப்படத்தின் நிஜ கதாநாயகன்

மேற்கண்ட நிகழ்ச்சி சென்னை, சைதாப்பேட்டை, சென்னை மாதிரி பள்ளியில் நடைபெற உள்ளது. எனவே கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறவுள்ள மின்னொளி கபடிப் போட்டியில் பல்லாயிரக்கணக்கில் தி.மு.கழகத் தோழர்கள் பங்கேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின்

2-ஆம் கட்டப் பணிகளை விரைவுபடுத்த ஒன்றிய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி

புதுடெல்லி,பிப்.5,

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ள மாநிலங்களவை கழக உறுப்பினர் இரா.கிரிராஜன் ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் அமைச்சரிடம் சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் தொடர்பாககேள்வி எழுப்பினார்.

அக்கேள்வியில் சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்ட திட்டத்தை விரைவாக முடிப்பதற்கான நிதி வழங்குவதை விரைவுபடுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? வெளிப்புற நிதியளிப்பு நிறுவனங்களான JICA மற்றும் ADB இலிருந்து அனுமதிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன என்று இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி இருந்தார்.

இக் கேள்விக்கு பதில் அளித்துள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இணை அமைச்சர் டோக்கன் சாஹு, சென்னை மெட்ரோ ரயிலின் 118.9 கிலோ மீட்டர் நீளமுள்ள இரண்டாம் கட்டத்துக்கு ரூ. 63,246.40 கோடி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்டதிலிருந்த ரூ. 10,354.15 கோடி நிதியை வழங்கப்பட்டுள்ளது

மேலும் அந்த பதிலில் JICA எனப்படும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையால் ரூ. 20,196 கோடி கடன் ஒதுக்கப்பட்டு, அதில் ரூ. 1,995 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ADB எனப்படும் ஆசிய வளர்ச்சி வங்கியால் ரூ. 5,596.50 கோடி கடன் ஒதுக்கப்பட்டு, அதில் ரூ. 790 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது.

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருத்தணி தொகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை!

திருவள்ளூர் பிப் 05:-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் திருத்தணி சட்டமன்ற தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது இளைஞர்கள் மாணவர்கள் தன்னார்வ அமைப்புகள் தொழிற்சங்க தொழில் முனைவர் கல்வியாளர்கள் விவசாய சங்கங்கள் வியாபாரி சங்கங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சமூக நல்லிணக்க பிரதிநிதிகள் ஆகியோர் எதிர்பார்ப்பு கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் இன்று 05-02-2026 வியாழன் கிழமை மாலை 4 மணி அளவில் திருத்தணி (ஜி. ஆர்.டி. ரீஜென்ஸியில்) நடைபெறுகிறது

இதனைதொடர்ந்து கழக மூத்த முன்னோடிகளின் அவரவர் இல்லங்களுக்கே சென்று மரியாதை செய்வித்தல் நிகழ்வும், தலைவர்களின் சிலைகளுக்கு, மாலை அணிவிக்கும் நிகழ்வும் நடக்கிறது இதில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முனைவர் டாக்டர் எஸ் ஜெகத்ரட்சகன் எம். பி. சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை கேட்டு கலந்துரையாடல் நடத்துகிறார்கள் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் விஜி.ராஜேந்திரன் எம்.எல். ஏ, திருத்தணி எம். பூபதி மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொள்கிறார்கள் என தமது அறிக்கையின் வாயிலாக மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம். எல்.ஏ தெரிவித்துக் கொண்டார் .

ஈரோடு –நாமக்கல் புதிய ரயில் பாதைக் கோரிக்கையை நிராகரித்த ரயில்வே அமைச்சகம்!

ஈரோட்டு மக்களுக்கு ஒன்றிய அரசு மாபெரும் துரோகம்!

கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப்.5-

தமிழ் மக்களின் உழைப்பையும் வரியையும் உறிஞ்சிக் கொண்டு, வளர்ச்சித் திட்டங்களில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நயவஞ்சகப் போக்கு மீண்டும் ஒருமுறை நாடாளுமன்றத்தில் அம்பலமாகியுள்ளது எனவும்

ஈரோடு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஈரோடு - நாமக்கல்லை எளிதாக இணைக்கும் புதிய ரயில் பாதைக் கோரிக்கையை, நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலில் ஒன்றிய அரசு முற்றிலுமாக நிராகரித்துள்ளது.

1. ஈரோடு மக்களின் 50 ஆண்டு கால கோரிக்கை நிராகரிப்பு:

ஈரோடு - நாமக்கல் இடையே நேரடி ரயில் பாதை என்பது இப்பகுதி மக்களின் 50 ஆண்டுகால தார்மீகக் கோரிக்கை. ஆனால், சேலம் மற்றும் கரூர் வழியாக ஏற்கனவே இணைப்பு உள்ளதாகக் கூறி இக்கோரிக்கையை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது.

தற்போதைய பாதைகள் சுமார் 100 கிலோ மீட்டருக்கும் மேல் சுற்றிச் செல்லும் நிலையில், வெறும் 30 - 40 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நேரடிப் பாதையை 'அவசியமற்றது' எனக் கூறுவது ஈரோடு தொகுதி மக்களை முட்டாளாக்கும் செயலாகும்.

2. குமாரபாளையம் தொழில் மண்டலத்தின் மீது தாக்குதல்:

ஆசியாவிலேயே மிகப்பெரிய விசைத்தறி மற்றும் ஜவுளி மையமான குமாரபாளையம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை ரயில்வே வரைபடத்தில் இணைக்க ஒன்றிய அரசுக்கு விருப்பமில்லை என்பது, பதிலில் இருந்து தெளிவாக தெரியவந்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக, இந்தப் பகுதிகள் ரயில்வே இணைப்பின்றி பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ளன. ஆனால், நடைமுறையை புரிந்துகொள்ளாமல், "குமாரபாளையம் ஈரோட்டில் இருந்து வெறும் 15 கி.மீ தொலைவு தான்" என்று காரணம் சொல்லி தட்டிக்கழிக்கிறது ஒன்றிய அரசு.

3. சென்னை செல்லும் பயணிகளுக்கும் விடிவு இல்லை:

ஈரோடு மற்றும் நாமக்கல் வழியாக சென்னைக்கு புதிய ரயில் சேவை கோரியதற்கு, "தற்போதுள்ள 4 வழித்தடங்களில் இயக்கப்படும் ரயில்களே பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானது" என ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

இதுவும் நடைமுறையை உணராத ஆணவமான செயலே! அந்த 4 வழித்தடங்களில் வரும் ரயில்கள் ஏற்கனவே கேரளா மற்றும் தென் மாவட்ட பயணிகளால் நிரம்பி வழிந்து, ஈரோடு மற்றும் நாமக்கல் மக்களுக்கு ஒரு இருக்கை கூட கிடைப்பதில்லை.

எனினும், மக்களின் தவிப்பை சிறிதும் உணராமல் "உள்ள வழித்தடங்களே போதும்" என்று அலட்சியாகப் பேசுகிறது ஒன்றிய அரசு.

4. நிலம் கையகப்படுத்துதல் ஒன்றிய அரசின் 'பச்சைப் பொய்':

தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்கள் தாமதமாவதற்கு நிலம் கையகப்படுத்துதலைக் காரணமாகக் காட்டி, நாடாளுமன்றத்தில் பொய்யுரைத்துள்ளது ஒன்றிய அரசு உண்மையில், தமிழ்நாடு அரசு நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்குத் தேவையான அனைத்து நிர்வாக ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது. ஆனால், திட்டங்களுக்கு 1000 கோடி வேண்டுமென்றால், அதில் 10%-யை கூட ஒழுங்காக ஒதுக்காமல், மாநில அரசு மீது பழியைத் திருப்பி தப்பிக்கப் பார்க்கிறது ஒன்றிய அரசு.

5. வரிப்பணம் தமிழ்நாட்டுடையது; திட்டங்கள் வடமாநிலங்களுக்கா?

தமிழ்நாட்டிற்கு அதிக நிதி வழங்குவதாகவும் நாடாளுமன்றத்தில் நாடகமாடியுள்ளது ஒன்றிய அரசு. ஆனால், சமீபத்தைய பட்ஜெட்டில் (2026-27) தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு, இங்கிருந்து பெறப்படும் வரி வருவாயோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மிக அவமானகரமானது.

இந்தாண்டு ரயில்வே திட்டங்களுக்காக உத்தரப் பிரதேசத்திற்கு 20,012 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்திற்கு 15,188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், நாட்டின் பொருளாதார என்ஜினாகத் திகழும் தமிழ்நாட்டிற்கு வெறும் 7,611 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்படி நிதி ஒதுக்கீட்டில் மோசமான பாரபட்சத்தை காட்டிவிட்டு, அதிக நிதி ஒதுக்குகிறோம் என்று ஒன்றிய அரசு கூறுவது, மலினமான அரசியலின் தலைச்சிறந்த உதாரணம்.

தமிழ்நாட்டை வெறும் வாக்கு வங்கியாகவும் வரி வசூல் மையமாகவும் மட்டும் பார்ப்பதை ஒன்றிய அரசு அடியோடு நிறுத்த வேண்டும். ஈரோடு உள்ளிட்ட தமிழ்நாட்டின் நியாயமான அனைத்து ரயில்வே கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். அதுவரை நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் எமது போராட்டம் தொடரும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர துறை வடக்கு

வ.வ.அ.இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண்.பி4 / 523A / 2025 **குறுகிய கால மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது (ஒப்ப விதிகளின்படி)

பணியின் விவரம் : பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5 லாரி நிலையம் 02 எண்ணிக்கையிலான (Front End Loader) களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் 300 நாட்களுக்கு பணியமர்த்துதல்	
பணியின் மதிப்பு :- ரூ.45,19,872/-	முன் வைப்புத் தொகை :- ரூ.45,200/-
ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 16.02.2026 மாலை 03.00 மணி	
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 17.02.2026 மாலை 3.30 மணி	
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in	
செ.ம.தொ.இ / 736 / ஒப்பந்தப்புள்ளி / 2026	மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி பொற்செல்வி இளமுருகு
பிப்ரவரி 5 (2013)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.

தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் "கலைஞர் விருதினை" அளித்து சிறப்பு செய்தார்.

"1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.